Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTU
CC NO. 677/**2019**

**Depostitions of PW- 1 Witness for**

| | |
|---|---|
| Name | வேலுச்சாமி, வனச்சரக அலுவலர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07[th] day of November 2023.

Signature of Witness.

07.11.2023

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சேலம் மாவட்டம் வேளாண்காடுகள் வனச்சரகத்தில் வனச்சரக அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 13.03.2019 ம் தேதி நான் திருவில்லிபுத்தூர் வனச்சரக அலுவலராக பணிபுரிந்தபோது திருவில்லிபுத்தூர் வனவர் செந்தில் முருகன் மற்றும் ரங்கர் கோவில்பீட் வனக்காப்பாளர் சண்முகராஜ் ஆகியோர் கொண்ட குழுவினர் 13.03.2019 ம் தேதி காலை சுமார் 9.00 மணியளவில் ரங்கர்கோவில் பீட்டில் ராமக்கல் சராகம் மற்றும் தலையணை பாறை சரகம் அருகில் உள்ள காப்பு காட்டின் உள்ளே சுமார் 1 கி.மீ தொலைவில் சென்று டிராக்டரின் மூலம் மணல் அள்ளி வந்ததை தடுத்து

நிறுத்தி சோதனை செய்ததில் டிராக்டர் ஓட்டிவந்த நபரை தவிர உடன் இருந்த நபர் தப்பி ஓடிவிட்டார். டிராக்டர் ஓட்டி வந்த நபரை பிடித்து விசாரணை செய்ததில் ஸ்தலத்திலேயே ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. எதிரி பாண்டியராஜ் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பிடிப்பொருட்களான டிராக்டர் TN 60 V 0957 மற்றும் மண்வெட்டி 4 எண்ணம், இரும்பு தட்டு 4 எண்ணம் ஆகியவற்றையும் பிடிபட்ட எதிரியையும் மேல் விசாரணைக்காக திருவில்லிபுத்தூர் வனச்சரக அலுவலகம் கொண்டுவரப்பட்டது. மணல் அள்ளப்பட்ட இடம் காப்புக்காடு என்பதை உறுதி செய்ய வனவர் செந்தில்முருகன் மற்றும் வனக்காப்பாளர் சண்முகராஜ் ஆகியோர் மணல் அள்ளப்பட்ட இடமான ரங்கர்கோவில் பீட் காப்பு காடு பகுதிக்குள் GPS அளவுகளுடன் புகைப்படம் எடுத்து சமர்பித்தனர். வனக்காப்பாளர் சண்முகராஜ் அவர்களால் H நமுனா எண்–0017062 , நாள் –13.03.2019 பூர்த்தி செய்தும், பிடிப்பட்ட எதிரி மற்றும் பிடிபொருட்களை கனம் நீதிமன்றம் நீதித்துறை நடுவர் எண். 2 அவர்களுக்கு அனுப்பி வைத்து அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். தப்பி ஓடிய நபரான 2 ம் எதிரி கோவிந்தராஜ் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமீன்பெற்று விட்டதால் அவரை கைது செய்யவில்லை. மேற்படி வழக்கை புலன் விசாரணை செய்து எதிரிகள் இருவரும் ரங்கர்கோவில் பீட் காப்புக்காட்டில் மணல் அள்ளி விற்பனை செய்து வந்தது ஊர்சிதமானதினால் புகார் மனுவினை நீதிமற்றத்தில் சமர்பித்தேன். 13.07.2019 ம் தேதி எதிரிகள் மீது பிரிவுகள் 1972 ம் ஆண்டு வன உயிரின பாதுகாப்புச்சட்டம் பிரிவுகள் 2(15), 27, 29, 50, 51 மற்றும் 1882 வருட தமிழ்நாடு வனச்சட்டம் ACT –5 பிரிவுகள் –21(d)(f) ன் கீழ் A நமுனா தாக்கல் செய்தேன். ( **H நமுனா அ.சா.ஆ.1 ஆகவும், எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ. 2 ஆகவும், ஸ்தல மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், குற்றஅறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், படிவம்–90 அ.சா.ஆ. 5 ஆகவும், A நமுனா அ.சா. ஆ. 6 ஆகவும், சரணாலயமாக அறிவித்த அறிவிக்கையின் நகல் அ.சா.ஆ.7, குற்றம் நடந்த இடத்தினை காட்டும் பீட் வரைபட நகல் அ.சா.ஆ.8**

**ஆகவும், சம்பவஇடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் மொத்தம் 4 எண்ணிக்கை அ.சா.ஆ.9 ஆகவும், TN 60 V 0957 பதிவு எண் கொண்ட டிராக்டர் அ.சா.பொ.1 ஆகவும், அதோடு இணைக்கப்பட்டிருந்த டிரைலர் எண் அ.சா.பொ. 2 ஆகவும், மண்வெட்டி 4 எண்ணம் அ.சா.பொ.3 ஆகவும், இரும்புத்தட்டு 4 எண்ணம் அ.சா.பொ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.